## மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழு
## தொழிற்சார் அறிவை மதிப்பிடும் பரீட்சை– மார்ச்/ஏப்ரல் 2021
## ஒப்பனையாளர்
### தேசிய தொழிற் தகைமை – மட்டம் 04

**நேரம் - 03 மணித்தியாலங்கள்**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்;**

- இந்த வினாத்தாள் இரு பாகங்களை அதாவது 1 மற்றும் 2 ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.
- இவ்வினாத்தாளில் பல்தேர்வு வினாக்களும் குறுகிய விடைகளைக் கொண்ட வினாக்களும் உள்ளடங்கியுள்ளன.
- பகுதி A யில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள விடையெழுதுந்தாளில் அதற்கு உரிய இலக்கத்துக்குரிய கூட்டில் (X) அடையாளத்தை இடவும்.
- பகுதி 2 இல் உள்ள **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்
- இந்த வினாத்தாள் 11 பக்கங்களைக் கொண்டது

---

### பகுதி - 1

1. இரண்டு பேர் ஒப்படை மாடமொன்றில் பணிபுரிய எத்தனை சதுர அடி நிலப்பரப்பு தேவை ?
   a. 200 - 230
   b. 350 - 380
   c. 100 - 130
   d. 120 – 150

2. Hyponychium எனப்படுவது ?
   a. நகத்துக்கு மேலாக உள்ள புறத் தோலாகும்
   b. வெளிப்படையாக உள்ள (free edge) விளிம்புக்குக் கீழே உள்ள சருமமாகும்
   c. நகத்தின் பக்கத்தில் உள்ள நகத் தவாளிப்புக்களாகும் ( Nail Grooves)
   d. நகததின் ஆணி ் ஆகும் (Nail Matrix)

3. நீண்ட, ஒடுக்கமான குழி விழுந்த கன்னங்களை உடைய முகம் பிரதிபலிப்பது,
   a. Oval முகம்
   b. Oblong முகம்
   c. Diamond முகம்
   d. Triangular முகம்

4. பின்வரும் வாக்கியங்களுள் ஒழுக்க நெறியைக் கூறும் வசனம் யாது ?
   a. காசை எவ்வாறு சம்பாதித்து வருமானம் ஒன்றைப் பெறுவது எப்படி
   b. சிகிச்சையை வெற்றிகரமாகவும் முறையாகவும் மேற்கொள்வது எவ்வாறு
   c. வாடிக்கையாளரின் காப்பையும் பாதுகாப்பையும் வலியுறுத்தியவாறு வேலை செய்வது எவ்வாறு
   d. உங்கள் இலக்கை அடையும் விதமாக வியாபாரத்தை மாற்றி அமைப்பது எவ்வாறு

5. ஒப்பனை மாடமொன்றில் வித்தியாசமான மட்டங்களில் தொற்றுக் கட்டுப்பாடுகள் அவசிய மாகின்றன? தொற்றுக் கட்டுப்படுத்திகளில் மிகவும் தாழ்ந்த மட்டம்………என அழைக்கப்படும்.
   a. நுண்ணுயிரழிப்பு
   b. சுத்தப் படுத்தப்படல்
   c. தொற்று நீக்கம்
   d. பக்டீரியாக்கொல்லி

6. நகச் சிகிச்சையைப் (Manicure) பூரணப்படுத்தியதும் பின்வரும் (cotton, emery bords மற்றும் orange wood stick) சாதனங்களைக் கொண்டு நீங்கள் என்ன செய்ய வேண்டும் ?
   a. இவ்வாறான நுண் துளையற்ற உருப்படிகளை மீள் சுழற்சி செய்தல்
   b. இவ்வாறான நுண் துளையற்ற உருப்படிகளை அப்புறப்படுத்தல்
   c. இவ்வாறான துளையுள்ள உருப்படிகளை அப்புறப்படுத்தல்
   d. இவ்வாறான துளையுள்ள உருப்படிகளை துப்புறவு செய்தல்

7. தொற்றக் கூடிய நோய்கள் எனப்படுபவை, ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு நோயைப் பரப்புவையாகும். இத்தைய நோய்க்கான ஒரு உதாரணம் hepatitis B (HBV). ஆகும். உடலின் எப்பாகத்தில் hepatitis B (HBV) தாக்கத்தை ஏற்படுத்துகிறது ?
   a. நுரையீரல்
   b. இருதயம்
   c. கல்லீரல்
   d. சீறு நீரகம்

8. மேற்றோல் (epidermis) சருமத்தின் ஐந்து படைகளைக் கொண்டுள்ளது. அவையாவன: stratum corneum, stratum lucidum, stratum granulosum, stratum spinosum மற்றும் stratum germinativum.? இவற்றுள் கலத்தின் வளர்ச்சி உயிரணுப்பிளவின் மூலம் (mitosis) மிகவும் தாழ்வாக உள்ள எப் படையின் ஊடாக நிகழ்கிறது ?
   a. stratum granulosum
   b. stratum germinativum
   c. stratum spinosum
   d. stratum lucidum

9. கல்வனிக் பொறியைப் பயன்படுத்தும் போது குருதிச் சுற்றோட்டம் பின்வரும் எதனால் குறைகிறது
   a. Cataphoresis
   b. ஒட்சியேற்றம்
   c. Anaphoresis
   d. Hydroxcetion

10. Bacilli எனப்படுவது பின்வருவற்றைக் கொண்ட ஒரு பற்றீரியாவாகும்
   a. Cork screw வடிவம்
   b. வட்ட வடிவம்
   c. Rod வடிவம்
   d. வளைவான வடிவம்

11. நக்தின் படுகையும் நக ஆணியும் கீழேயுள்ள பின்வரும் எந்த எலும்புடன் (underlying bone) இணைக்கப்பட்டுள்ளன ?
   a. The bed epithelium
   b. Nail grooves
   c. Muscles
   d. Ligaments

12. நகப் பங்கசுவைக் கொண்ட ஒரு வாடிக்கையாளருக்கு செயலாற்ற நீங்கள் அனுமதிக்கப் படும் சேவையாவது
   a. புதிய வளர்ச்சியை Refill செய்வது
   b. பொலிஷைப் பூசி புறத்தேலை (cuticle) அகற்றுவது
   c. செயற்கையான வளர்ச்சியையுடைய நகம் ஏதுமிருப்பின் அதனை அகற்றல்
   d. துப்புறவு செய்த பின் மினுக்குவதற்காக Buff செய்வது

13. மொத்த இலாபம் என்படுவது
   a. எவ்வாக் கழித்தல்களையும் செய்த பின்னர் இறுதியாக உள்ள இலாபமாகும்
   b. அடுத்த பற்றுச் சீட்டுக்கெதிராக கழிக்கப்டும் பணமாகும்
   c. எல்லாக் கழித்தல்களும் எடுக்கபடுவதற்கு முன்னராக உள்ள இலாபமாகும்
   d. கடனைப் பகுப்பாய்வு செய்யும் ஒரு முறையாகும்

14. நிலையான கொள்விலை எனப்படுவது : ,
   a. முசயபெந ரழழன எவஉைம
   b. மேற்கொள்ளப்பட்ட வியாபார மட்டத்தினால் பாதிக்கப்படாத கொள்விலையாகும்
   c. வியாபாரத்தின் மட்டங்களுக்கு நேரடியாக தொழிற்சார்பண்பினைக் கொண்ட கொளடவிலையாகும்
   d. ஒவ்வொரு ஊழியருக்கும் தரப்படும் மாறுதலைக் கொண்ட ஊதியத்தின் அளவின் மீது தங்கியிருக்கும் கொள்விலையாகும்.

15. தனிப்பட்ட தொடர்பின் காரணமாக பரவும் நோய் அழைக்கப்படுவது
   a. முறைப்படியானது
   b. பிறப்பிலேயே ஏற்பட்டது
   c. தொற்றக் கூடியது
   d. தொழில் சார்ந்தது (Occupational)

16. சருமப் பகுப்பாய்வொன்றை நீங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் வாடிக்கையாளரை நீங்கள் பின்வருவன பற்றி எதனை (n) ______________நீங்கள் பூரணப்படுத்தச் சொல்ல வேண்டும் ?
   a. சருமத்தின் நிலைமை
   b. சுகாதாரப் பரிசோதனை
   c. ஒவ்வாமைப் பட்டியல்
   d. பராமரிப்பின் பின்னரான தகவல்கள்

17. முகஞ் சார்ந்த சிகிச்சையின் போது (facial) வாடிக்கையாளர் ஒருவருக்கு ஏற்படுத்தும் இயற்கையான பக்க விளைவுக்கு வாடிக்கையாளர் உட்படுத்தப்படும் சிகிச்சை அல்லது நிலைமையை அழைப்பது (n)
   a. ஒவ்வாமை
   b. சுருங்குதல்
   c. சருமப் பகுப்பாய்வு
   d. அசாதாரணம்

18. எண்ணெய்த்தன்மை வாய்ந்த அல்லது முகப் பருக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பான சருமத் துக்கு பாவிப்பதற்கு எவ்வகையான tonic, lotions வாடிவகைக்கமக்கப்பட்டுள்ளன ?
   a. Tonics
   b. Freshens
   c. Toners
   d. Astringents

19. சருமத்தின் (வெளிப்பக்க) honey படையின் peeling மற்றும் shading ஐ உசாவுவதற்கு பயன்படுத்தப்படும் பதம்
   a. Scrubbing
   b. Exfoliation
   c. Emulsifying
   d. Steaming

20. முகப்பருப் புண்களுக்குக் (Acne Lesions) காரணமாக அமையும் அதிகப்படியாகக் கட்டி யெழுப்பப்படும் இறந்த கலங்களுக்கு சிகிச்சையளித்து அல்லது அவற்றைத் தவிர்ப்பதற்காக நுண்துளைகளை தளர்த்தி அடைபட்டிருக்கும் எண்ணெய்த்தன்மை வாய்ந்த அல்லது முகப் பருக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பான சருமத்துக்கு பாவிக்கப்படுவது யாத ?

   a. Modelage
   b. Gommage
   c. Exfoliation treatment
   d. Alpha hydroxy acid

21. சருமத்தின் இழுவைத்தன்மையை மற்றும் நெகிழ்வுத்தன்மையை சருமத்துக்குத் தர உதவும் collagen புரதம் மற்றும் elastin நார்களை சருமத்தின் எந்தப் படை உற்பத்தி செய்கிறது.

   a. அடித் தோல் (Dermis)
   b. மேற்றோல் (Epidermis)
   c. Stratum lucidum
   d. Stratum germinativum

22. Sudoriferous சுரப்பியின் பிரதான தொழிற்பாடு யாது ?

   a. சருமத்துக்கு இழையமைப்பைத் தருவது (texture)
   b. சருமத்துக்கு ஆரோக்கியமான சாயலைத் தருவது
   c. சருமத்தின் இழுவைத் தன்மையை பாதுகாத்தல்
   d. உடலின் உடல் வெப்பநிலையை நெறிப்படுத்துகிறது

23. பெரும்பாலும் சருமத்தின் உட்பொருள் இழையம் எதனால் ஆக்கப்பட்டுள்ளது ?

   a. கரற்றீன்
   b. தசை
   c. கொழுப்புக் கலங்கள்
   d. மேற்றோல் கலங்கள் (epidermis cells)

24. வெளிறிய சருமமும் இருண்ட சருமமும் பின்வருவனவற்றின் எவற்றின் வித்தியாசம் காரணமாக ஏற்படுகின்றன ?

   a. அவை உள்ளிருக்கும் melanocytes களின் எண்ணிக்கை
   b. உற்பத்தி செய்யப்படும் melannin களின் வீதமும் தொகையும்
   c. அவை உள்ளிருக்கும் நரம்புகளின் அந்தங்களின் எண்ணிக் கை
   d. அவை உள்ளிருக்கும் மேற்றோல் கலங்களின் வீதம்

25. சருமத்தின் 90% வீதமான சுருக்கங்கள் ஏற்படுவதற்கான காரணம்,

   a. சூரிய வெளிச்சத்துக்கு வெளிப்பட்டிருத்தல்
   b. மாசுபடுத்திகளுக்கு வெளிப்படுத்தப்பட்டிருத்தல்
   c. அளவுக்கதிகமாக astringents களைப் பயன்படுத்துதல்
   d. அளவுக்கதிகமாக ஒளிரும் விளக்குகளுக்கு வெளிப்படுத்தப் பட்டிருத்தல்

26. சருமத்தின் மேற்பாகத்தை அடைய stratum germinativum இன் கலங்களுக்கு எவ்வளவு காலம் எடுக்கும்

   a. 5 இலிருந்து 7 நாட்கள்
   b. 12 இலிருந்து 14 நாட்கள்
   c. 19 இலிருந்து 21 நாட்கள்
   d. 28இலிருந்து 30 நாட்கள்

27. கர்ப்பத்தின் காரணமாக பெரும்பாலும் அதிகரித்த தோல் நிறமூட்டும் பொருள் ஒழுங்கீன மான பிரதேசங்களில் காணப்படுவதற்கு பின்வரும் எந்த சரும நிலைமை காரணமாகிறது?

a. Vitiligo
b. Chloasma
c. Papilloma
d. Earythma

28. உற்பத்திப் பொருளொன்றை விற்பதற்குத் தெரிவு செய்யும் போது அதன் தரத்தைப் பற்றிய பின்வரும் எந்த கூற்று **சரியானது** ?

a. அப் பொருள் சந்தையில் தரமானதாகவும் விலையுயர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்
b. அந்த உற்பத்தி சாதாரணமானதாகவும் சந்தையில் அதிக கிராக்கியைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
c. அப் பொருள் வாடிக்கையாளரின் தேவைக்கு ஏற்றதாகவும் நியாயமானதான விலையைக் கொண்டதாவும் இருத்தல் வேண்டும்.
d. அப் பொருள் தரத்தில் குறைந்ததாக இருந்த போதிலும் உற்பத்திக்கு அதிக கிராக்கியைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

29. பின்வருவனவற்றுள் மருத்துவக் கழிவுகளாக (clinical waste) எப்போதும் கருதப்பட வேண்டியவை யாவை?

a. உடலில் இருந்து வெளியாகும் திரவங்களால் மாசு படுத்தப்பட்ட எவையும்
b. அழுக்கான துவாய்கள், மேலங்கிகள் மற்றும் பயனபடுத்தப்பட்ட அனைத்து உபகரணங்கள்
c. தரையில் கைதவறவிடப்பட்ட உபகரணங்கள்
d. காலாவதியான காலத்தைக் கடந்த உற்பத் பொருட்கள்

30. கண் புருவத்தை வடிவமைக்கும் போது tweeze செய்யப்பட்ட பிரதேசங்களில் கிருமிநாசினிகளை பாவிப்பது ஏன் ? ,

a. இறந்த சருமங்களை அகற்றுவதற்காக
b. தொற்றுக்களைத் தவிர்ப்பதற்காக
c. நுண்டுளைகளின் அடைப்புக்களை அகற்றுவதற்காக
d. நோவை அகற்றுவதற்காக

(புள்ளிகள் 1 X 30 = 30)

## பகுதி - 2

1. பின்வருமாறு தரப்பட்டுள்ள காரணிகளை சுருக்கமாக விளக்கவும்

1.1 நேரோட்ட மின்சாரம். (புள்ளிகள் 02)

1.2 எதிரோட்ட மினசாரம் (புள்ளிகள் 02)

1.3 உயர் மீடிறன் மின்சாரம் (புள்ளிகள் 02)

1.4 கல்வனிக் மின்சாரம் (புள்ளிகள் 02)

1.5 Desincrustation (புள்ளிகள் 02)

2.

2.1 நகச் சிகிச்சை உபகரணத்தை கிருமி நீக்கஞ் செய்யும் விதத்தை படிப்படியாக விளக்குக. (புள்ளிகள் 2.5)

2.2 நகப் பூச்சுக்கு முன்னராக base court பூசப்படுவதற்கான இரு காரணங்களை விளக்குக (புள்ளிகள் 2.5)

2.3 பொதுவான நகம் சம்பந்தப்பட்ட இரண்டு நோய்களைப் பெயரிட்டு அவற்றைப் பற்றி விளக்கவும். (புள்ளிகள் 2.5)

2.4 நகச் சிகிச்சையின் போது வாடிக்கையாளர் ஒருவரின் கை விரலில் வெட்டு ஏற்படின் அதற்கான முதலுதவியை எவ்வாறு செய்வீர்கள் என்பதை விளக்குக. (புள்ளிகள் 2.5)

3.

3.1 ஐந்து வகையான உடலை நீவும் (massage) அசைவுகளுக்கான தொழில் நுட்ப மற்றும் சாதாரணமான பெயர்களை பட்டியற்படுத்தி அவற்றை விளக்குக ( புள்ளளிகள் 05)

3.2 உடலை நீவும் செயற்பாடுகள் கொடுக்கப்படக் கூடாத மூன்று சரும நிலைமைகளைப் பட்டியற்படுத்துக. (புள்ளிகள் 03)

3.3 முகத்தை நீவி விடும் (face massage) சிகிச்சையின் போது வாடிக்கையாளரை நல்ல நிலைமையில் வைத்திருப்பதும் சிகிச்சையாளர் சிறந்த நிலைப்பாட்டில் இருந்து கொள்வதும் ஏன் முக்கியம் என்பதை விபரிக்குக. ( புள்ளிகள் 02)

04.

4.1 ஒப்பனை மாடமொன்றில் விளைதிறனுடன் பணியாற்றுவதற்கு காப்பான வேலைப் பிரதேசமொன்றைப் பேணும் விதத்தை விளக்குக (புள்ளிகள் 05)

4.2 ஒப்பனை மாடமொன்றில் குறுகக்குத் தொற்றுக்களைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழியை சுருக்கமாக விளக்கவும; (புள்ளிகள; 05)

05.

. 5.1 பின்வரும் உற்பத்திகளின் அம்சங்களை விளக்கவும் (புள்ளிகள் 06)

| உற்பத்தி | அம்சம் |
|---|---|
| Liquid foundation | |
| Cream foundation | |
| Cake foundation | |

5.2 ஒப்பனையை பிரயோகிப்பதற்கு முன்னர் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நான்கு காரணிகள் யாவை ? அவற்றை வெவ்வேறாக விபரிக்கவும் (புள்ளிகள் 04)

6.

6.1 பட வரைபொன்றை வரைந்து கண் புருவமொன்றை எவ்வாறு முறையாக வடிவமைப்பது என்பதை விபரிக்கவும். ( புள்ளிகள் 05 )

6.2 WAX சிகிச்சையின் பின்னர், வீக்கம், எரிச்சல் மற்றும் சிகப்புத் தன்மையாதல் முதலியவற்றுக்கான இரு பிரதான காரணங்களை எழுதி விபரிக்கவும். ( புள்ளிகள் 05 )

7.

7.1. வித்தியாசமான ஐந்து வகை cleanses களைப் பட்டியற்படுத்தி அவற்றை விளக்கவும் (புள்ளிகள் 05)

7.2. Setting mask ஐயும் non-setting mask ஐயும் விபரித்து ஒவ்வொன்றுக்கும் இரு உதாரணங்கள் வீதம் தரவும் (புள்ளிகள் 03)